**எலஹர பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மே 12 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 11 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜூன் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து எலஹர பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

களஞ்சியப் பண்டங்கள் தொடர்பாக களஞ்சிய முற்பணக் கணக்கு முறையினைக் கடைபிடித்திருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு தொடர்பாக 2017 ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,599,647 இற்கான தொகை மீளாய்வாண்டிற்கான கடன்கொடுத்தோர் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டுகள் தொடர்பாக சேகரிக்கப்பட்ட வெளிக்கள வருமானம் ரூபா 81,000 தொகை பலவின வைப்புக்கள் என காட்டப்பட்டிருந்தமையால் அதே தொகையால் நடைமுறைப் பொறுப்புக்கள் மிகையாகவும் மற்றும் உரிமைகள் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தன.

(இ) முன் அலுவலகத்திற்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 51,367 இற்கான நிலையான சொத்துக்கள் மீண்டுவரும் செலவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 03 கணக்குகள் தொடர்பான மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறிப்புக்களில் காட்டப்பட்டிருந்த மீதிகளிடையே ரூபா 603,693 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

(ஆ) 2 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் பெறுமதி மற்றும் அதனோடு தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் காணப்பட்ட மீதிகளின் பெறுமதியிடையே ரூபா 313,013 தொகைக்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

### 1.3.4 தொங்கல் கணக்கு

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 224,961 தொகையான தொங்கல் கணக்கின் மீதியினை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 849,414 தொகைக்கான நிலுவை வீதவரியில் காணப்பட்டதுடன் 10 வருடங்களை மிகைத்த ரூபா 281,262 இற்கான நிலுவை வீதவரி பணத்தை அறவீடு செய்வதற்காக போதியளவு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 89,476,881 இற்கான நிர்மாணவேலை கடன்கொடுத்தோரில் 2-5 வருடங்கள் இடையே காணப்பட்டதுடன் ரூபா 2,118,590 இற்கான மீதியொன்று காணப்பட்டதுடன் அப் பணத்தினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.6 கணக்காய்விற்காக தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 10 கணக்கு விடயங்கள் தொடர்பாக கூட்டுப்பெறுமதி ரூபா 346,681,064 உரித்தினை உறுதிப்படுத்தும் பதிவேடு, கணிப்பீட்டு சபை அறிக்கை மற்றும் விரிவான அட்டவணைகள் ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.7 சட்டங்கள்விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள்விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள்விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் உப பிரிவுகள் 132(ஒ)(ஓ) | விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரத்தினை பெற்றிருக்காமல் ரூபா 102,500 தொகையொன்று உபசரிப்பு செலவுகள், மாணவர் செயலமர்வுகள் மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்குதல் ஆகியவற்றிற்காக செலவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை | |
| (i) விதி 112 | மேற்கூறிய விதியின் மூலம் எதிர்ப்பார்த்த தேவையினை நிறைவேற்றாமல் 07 உறுதிச் சான்றுகள் மூலம் ரூபா 3,720,804 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) விதி 113 | மேற்கூறிய விதியின் மூலம் எதிர்பார்க்க தேவையான நிறைவேற்றாமல் ரூபா 1,008,564 இற்கான தடுத்து வைத்தல் பணம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) விதி 115 | 11 கொடுப்பனவு உறுதிச்சான்றுகள் மூலம் கொள்வனவு செய்திருந்த ரூபா 276,651 தொகை பெறுமதியான பண்டங்கள் தொடர்பாக பொருட் பதிவேட்டுச் சான்றிதழ் இன்றி பணம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (iv) விதி 204 | 2015 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டின் போது இனங்கண்டிருந்த 10 வகையைச் சேர்ந்த 45 பண்ட விடயங்களின் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (v) விதி 214 | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பண்டக் கணிப்பீடுகள் 2017 மே 17 திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (vi) விதி 218 | அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்களும் கணிப்பீட்டு சபை ஒன்றின் மூலம் ஆண்டிற்கு ஒருமுறை கணிப்பீடு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனினும் சபையினால் எப்போதும் சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

-----------------------------------------------------------

| | |
|---|---|
| (i) நி.பி. 104(1),(3),(4) | பிரதேச சபைக்குச் சொந்தமான கப் வண்டி 2016 ஜூன் 17 ஆம் திகதி விபத்துக்குள்ளாகியமையால் ரூபா 526,479 தொகையான நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்ததுடன் அவ்விபத்து தொடர்பாக நி.பி. களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) நி.பி. 104(2) | மீளாய்வாண்டின் போது விபத்துக்குள்ளாகிய 02 வாகனங்கள் தொடர்பாக ரூபா 1,222,618 இற்கான நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவித்திருக்கவில்லை. |
| (iii) நி.பி. 156(1) | சபைக்குச் சொந்தமான கப் வண்டி ஒன்றின் வருமான அனுமதிப்பத்திரத்தை உரிய தினத்தில் பெற்றுக்கொள்ளாமையால் செலுத்தியிருந்த ரூபா 12,500 இற்கான தண்டப்பணம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்பு தொகை செலுத்துதல் தாமதித்த காரணத்தினால் மிகை விதிப்பு தொகையாக செலுத்தியிருந்த ரூபா 2,945 இற்கான தொகை தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (iv) நி.பி. 1647(ஈ) | மோட்டார் வாகன திருத்த வேலைக்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 128,315 தொகை பெறுமதியான பண்டங்களை பதிவு செய்திருக்கவில்லை. |

(ஈ) சுற்றறிக்கைகளும் சுற்று நிருபங்களும்

| | |
|---|---|
| (i) 2006 பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் பிரிவு 9.3(ஆ) | ரூபா 1,283,279 தொகைக்கான வாகன பழுதுபார்த்தல் வேலைக்கான செலவு மதிப்பீடு தொடர்பாக பூர்வாங்க அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) 2015 திசெம்பர் 04 ஆம் திகதிய உள்ளூராட்சி ஆணை யாளரின் ஹேளீ.ீ.டுபு.ீ.யுஹ.ீ.4.ீ.1.ீ.2 ஆம் இலக்க கடிதம் | தலைவருக்காக ஒதுக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ வாகனம் 2015 திசெம்பர் மாதம் முதல் ஒரு மாதத்திற்கு 150 லீட்டர்கள் எரிபொருள் வரையறைக்கு உட்பட செயலாளர்களினால் பயன்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் அவ் வாகனத்திற்காக 2016 ஜனவரி முதல் 2017 மார்ச் வரையான காலப்பகுதியில் குறிப்பிட்ட வரையறையை மிகைத்து ரூபா 267,900 இற்கான 2820 லீற்றர்கள் எரிபொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் படி, 2016 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்திலும் கூடிய செலவினம் ரூபா 638,061 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 1,178,968 தொகையாகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2016 ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடி யானவை | திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரியும் வரியும் | 345,751 | 218,176 | 849,415 |
| வாடகை | 496,162 | 530,494 | 190,535 |
| ஏனைய வருமானங்கள் | 12,577,190 | 11,487,194 | 7,228,890 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

(அ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு எலஹர பிரதேச சபைக்கு சொந்த அதிகாரப் பிரதேசத்தில் அறவிடப்பட வேண்டிய நிலுவை வீத வரியும் வரியும் ரூபா 849,415 தொகை ஆகக் காணப்பட்டதுடன் 2013 முதல் 2016 வரையான காலப்பகுதியில் நிலுவை மீதி 54.5 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு வீத வரி செலுத்த வேண்டிய 171 நபர்களிடம் 5 வருடங்கள் முதல் 20 வருடங்களை விட மிகையான காலம் வீத வரி செலுத்தப்படாமையினால் ரூபா 393,403 இற்கான நிலுவை மீதியொன்று நீண்டகாலமாக முன்கொண்டு வந்து காணப்பட்ட போதிலும் அவற்றை அறவீடு செய்வதற்காக பிரதேச சபைச் சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.3 கடை வாடகை

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பிரதேச சபைக்குச் சொந்தமான 38 கடைகளில் இருந்து ரூபா 190,535 இற்கான நிலுவைத் தொகையொன்று காணப்பட்டதுடன் அவற்றில் 14 கடைகளில் இருந்து 06 மாதம் முதல் 30 மாத காலம் வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 149,760 இற்கான வாடகை நிலுவையாகக் காணப்பட்டதுடன் அவற்றினை அறவீடு செய்வதற்காக உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.4 நீர்க் கட்டணம்

பிரதேச சபையினால் பராமரிக்கப்படும் 3 நீர்த்திட்டங்களில் இருந்து 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை நீர்க் கட்டண வருமானம் ரூபா 347,137 தொகையாகக் காணப்பட்டது.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் ஹிங்குரக்கொட நீதிவான் நீதிமன்றில் இருந்து 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட்டு பிரதான செயலாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 5,617,851 இற்கான தொகையொன்று பிரதேச சபைக்குக் கிடைக்க வேண்டியிருந்ததுடன், 2013 முதல் 2016 காலப்பகுதியில் அறவிடப்பட வேண்டிய நிலுவை மீதியின் முன்னேற்றம் 107 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 2.2.6 முத்திரைக் கட்டணம்

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்தினால் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 1,263,902 இற்கான முத்திரை கட்டணத் தொகை வடமத்திய மாகாண சபையில் இருந்து பெற்றுக்கொள்வதற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

(அ) சபைக்குச் சொந்தமான அரிசி மா தயாரிக்கும் நிலையம் தொடர்பாக ரூபா 522,500 தொகை பெறுமதியான உபகரணத் தொகுதிகள் 5 வருடங்கள் விட மிகையான காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) ரூபா 69,500 தொகைக்கு கொள்வனவு செய்திருந்த தச்சுவேலை இயந்திரம் பயன்படுத்தப்படாமல் சுமார் 06 வருட காலம் பயன்படுத்தப்படாமல் சபை வளவில் பாதுகாப்பற்ற நிலையில் காணப்பட்டது.

(இ) ஹேசுனு-3371 இலக்கம் கொண்ட டிரக்டர் வண்டி 02 வருட காலம் முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(ஈ) 53-5057 இலக்க பழுதடைந்திருந்த கப் வண்டி 10 வருடங்களை விட கூடிய காலம் முதல் திருத்த வேலை மேற்கொள்ளப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(உ) 2015 ஆண்டின் போது வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் எலஹர பிரதேச செயலகத்தின் மடுதமன நீர் செயற்திட்டத்திற்காக வழங்கியிருந்த ரூபா 1,490,000 தொகை பெறுமதியான நீர் சுத்திகரிக்கும் இயந்திரத்தை பயன்படுத்தியிருக்கவில்லை.

(ஊ) 2012 ஆண்டின் போது சுதர்சி பௌத்த மத்திய நிலைய வளவில் புதிய தொட்டி ஒன்று பொருத்துவதற்காக மற்றும் குழாய்களை பரப்புவதற்காக ரூபா 925,453 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் இதுவரை அவற்றை பயன்படுத்தியிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாகியதற்காக மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்த்தலுக்கான செலவுகள் ரூபா 526,479 தொகையாகக் காணப்பட்டதுடன், காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் இருந்து மீளளிப்புச் செய்யப்பட்ட தொகை ரூபா 428,523 தொகையாகக் காணப்பட்டமையால் மீதித் தொகையாகிய ரூபா 97,956 தொகையினை அதற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களைத் தீர்மானித்து அவர்களிடம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2016 ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்த 14 கட்டிட வரைபுகளுக்காக மற்றும் முன்னைய ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்த வரைபுகள் எதற்கும் இணக்கச் சான்றிதழ்கள் வழங்கியிருக்கவில்லை.

(இ) தியபெதும மற்றும் பகமூன பொது நூலகத்துடன் இணைந்த நெசனல மத்திய நிலையத்தை நடாத்துவதற்காக முறைப்படியான கேள்வி நடைமுறையொன்று கடைபிடிக்கப்படாமல் தனிநபர் ஒருவருக்கு காட்டப்பட்டிருந்தது.

(ஈ) தூரப் பிரயாண பஸ் தரிப்பிடமொன்று நிர்மாணிப்பதற்காக முன் சாத்தியக்கூறு ஒன்று மேற்கொள்ளப்படாமல் மகாவலி விளையாட்டுத் திடலின் முன்பகுதியில் அமைந்துள்ள கருங்கற்களை உடைத்து அகற்றுவதற்கு ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் பஸ் தரிப்பிடமொன்று நிர்மாணிப்பதற்கு அடிநிழற் பாறை ஒன்று தெரிவு செய்வதற்கு பதிலாக கருங்கற்களை கொண்ட காணி ஒன்றினை தெரிவு செய்திருந்தமையால் அக் கல்லினை உடைப்பதற்காக இதுவரை ரூபா 10,448,073 தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் மேலும் இருந்த கருங்கல்லை உடைப்பதற்காக ரூபா 24,141,706 தொகை செலவு ஏற்படுமென மதிப்பிடப்பட்டிருந்தது. மேலும் இந்த கருங்கற்களை உடைத்து அகற்றுவதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதியினை பெற்றிருக்காததுடன் அதனை உடைத்து அகற்றுவதற்கு திறந்த கூறுவிலை கோரல் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது ரூபா 56,595 தொகை பெறுமதியான நிலையான சொத்துக்களை அகற்றல் மேற்கொள்ளப்படாமல் சொத்துக் கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தது.

## 3.2 செயற்பாட்டு திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் பல வருட காலமாக பயன்படுத்தியிருந்த 09 வாகனங்களின் உரிமையை சபையின் பேருக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான க்ரூ வண்டியினது மற்றும் டிரக்டர் ஒன்றினதும் மைலோ மீற்றர் 02 வருடங்களை விட மிகையான காலம் முதல் செயற்படாமல் காணப்பட்டதுடன் அந்த மீற்றர்களை பழுதுபார்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2014 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை கொள்வனவு செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா 5,301,701 தொகையான நிலையான சொத்துக்களை உரிய நிலையான சொத்து பதிவேடுகளிலும் பொருட்பதிவேடுகளிலும் பதிவு செய்திருக்கவில்லை.

(ஈ) பிரதேச சபையினால் 796 குடும்பங்களுக்காக குடிநீர் வழங்கும் மூன்று நீர் வழங்கள் திட்டங்களினதும் நீர் குடிப்பதற்கு பொருத்தமற்றவை என தேசிய நீர்வழங்கள் மற்றும் வடிகால் அமைப்புச் சபையின் ஆய்வுகூட பரிசோதனைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(உ) சியமலாவ நீர் செயற்திட்டத்தின் நீர் வடிகட்டி திருத்தப்படாத காரணத்தினால் பல வருட காலம் முதல் நீர்வடிகட்டி பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(ஊ) மடுதமன நீர் செயற்திட்டத்தின் பம்பு நிலையம் உரிய முறைப்படி பராமரிக்கப்படாமையால் தொடர்சியாக நீர் வழங்குவதற்கு முடியாமல் காணப்பட்டது.

### 3.3 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

எலஹற பிரதேச சபைக்குச் சொந்தமான 28 கிராம சேவகர் பிரிவுகளில் காணப்பட்ட போதிலும், பக்கமுன மற்றும் தியபெதும ஆகிய பகுதிகளில் மற்றும் அத்தனகடவல சந்தை தரைப்பகுதி ஆகிய இடங்களில் இருந்து மாத்திரம் குப்பைகள் சேகரிக்கப்படுகின்றதுடன் அவ்வாறு நாளாந்தம் சேகரிக்கப்படும் சுமார் 03 தொகை குப்பைகளை வகைப்படுத்தப்படாமல் வன காப்புக் காணிப் பகுதியில் விடுவிக்கப்படுவதாகவும் அவ்வாறு விடுவிக்கப்படுவதன் காரணமாக காட்டு யானைகள் உட்பட வன சீவராசிகளில் வாழ்விற்கும் அவை அச்சுருத்தல் ஒன்றாகக் கூடியதாக இருக்கின்றது என அவதானிக்கப்பட்டது.

### 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

(அ) சபை கலைக்கப்பட்டதன் பின்னர் மந்திரிமார்களினால் தனிப்பட்ட முறையில் எடுத்துச் சென்றிருந்த 6 கையடக்கத் தொலைபேசிகளை 2017 மே 31 திகதி வரையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) வருமான நிருவாகி பதவியில் கடமையாற்றிய உத்தியோகத்தர் ஒருவரினால் வெளிக்கள பற்றுச்சீட்டு புத்தகங்களை முறையற்ற விதமாக பயன்படுத்தி சேகரிக்கப்பட்ட பணத்தை பிறழ் முறையில் அகற்றப்பட்டிருந்ததென வெளிக்கள தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. அவ்வாறு பெற்றிருந்த ரூபா 172,500 இற்கான தொகையினை முறைகேடாக பயன்படுத்தியது தொடர்பாக நடவடிக்கை ஏதும் 2017 மே 30 ஆம் திகதி வரையும் எடுத்திருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) வருமான நிருவாகம்
(இ) கடன்பட்டோர்.׃. கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஈ) வாகனக் கட்டுப்பாடு